

இராணிப்பேட்டை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் நவ்லாக் புளியங்கன்னு இரா.சிவஞானம் அவர்கள் இயற்கை எய்தினார் இதை யடுத்து கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர்மாவட்டசெயலாளர் ஆர்.காந்தி, விஸ்வாஸ் பள்ளி தலைவர் கமலா காந்தி ஆகியோர் நேரில் சென்று அவரது உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள் இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி, ஜி.கே.குழுமம் சந்தோஷ் காந்தி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் , ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன்,மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம் வாலாஜா ஒன்றிய செயலாளர்கள் சேஷா வெங்கட்ரமணன் பத்மநாபன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வெங்கடேசன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் சிவா மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் விஜியகுமார் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு பள்ளிகள் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றம்!

# முதல்வரின் அறிவுறுத்தல்படி பள்ளிக் கட்டணங்களை முறைப்படுத்துவோம்!

## சட்டப்பேரவை பதிலுரையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உறுதி!

**சென்னை, ஜன.27 – சட்டப்பேரவையில் ஜன.24 அன்று – 'தமிழ்நாடு பள்ளிகள் கட்டணம் வசூலிப்பதை முறைப் படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு' மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, "முதல்வர் அவர்களின் அறிவுறுத்தல்படி பள்ளிக் கட்டணங்களை முறைப்படுத்துவோம்!" என்று உறுதிபடக் குறிப்பிட்டார்.**

**சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-**



சட்டமன்ற உறுப்பினர்கள் வேல் முருகன், நாகைமாலி, முகம்மது ஷாநவாஸ், ஜி.கே.மணி ஆகியோர் பல்வேறு கருத்துகளை இது சார்ந்து சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய ஜி.கே.மணி அவர்கள் சொன்னமாதிரி private schoolsக்கான கட்டணத்தை முறைப்ப டுத்துவதை கொண்டுவந்ததே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான். So, இதனுடைய அடுத்த version ஆகத்தான், அதிகாரிகள் சார்ந்து மட்டுமல்லாமல், இதில் மாநில அளவில் இருக்கக்கூடிய ParentTeacher Association சார்ந்த உறுப்பினர் ஒருவரும் இடம்பெற வேண்டும், அவ்வாறு இடம்பெற்றால் தான் சரியான கருத்துகள் என்ன என்பதை உள்வாங்கிக்கொள்ள முடியும். ஏனென்றால் ParentTeacher Associationலிருந்து வருகிறவர்களுக்குத் தான் அந்த களத்தினுடையparents என்ன சொல்கிறார்கள் என்ற கருத்தை நாம் உள்வாங்க முடியும் என்பதற்காகத்தான் அவர்களையும் உள்ளே கொண்டு வந்தோம். முன்பு Matriculationsக்கான Director இருந்தார்கள். தற்போது அதை மாற்றி Director for private schools என்று கொண்டு வந்திருக்கிறோம். So, அவர்களையும் இதில் one of the உறுப்பினராக கொண்டு வருவதாக சொல்லியிருக்கிறோம்.

குறிப்பாக, இதுமாதிரியான கருத்துகள் வரும்போது 15 நாட்களுக்குள் யாராவது கருத்து இருந்தால் சொல்லுங்கள், அடுத்து நாங்கள் freeze செய்யப்போகிறோம் என்று இல்லாமல், 15 நாட்களை 30 நாட்களாக நான் நீட்டித்து தருகிறேன். உங்களுடைய கருத்துகள் எதுவாக இருந்தாலும் அதை உள்வாங்கிக்கொண்டு அதற்குத் தகுந்தாற்போல், அதை நாங்கள் சரிசெய்வோம் என்று சொல்லியிருந்தோம். இதற்கு முன்பு சட்டம் எப்படி இருந்தது என்றால், private schoolsஐ பொறுத்தவரையில் அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் கட்டணத்தை ஏற்றிக்கொள்ளலாம், ஏற்றாமலும் இருக்கலாம், நாளை கூட ஏற்றிக்கொள்ளலாம் என்று இருந்ததை முறைப்படுத்தி, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தக் குழு உட்கார்ந்து பேசி, இன்றைக்கு தகுந்தாற்போல் இந்த கட்டணம் உயர்த்தப்பட வேண்டுமா, இல்லை உயர்த்தப்படக்கூடாதா என்ற அளவிற்கு இருந்திட வேண்டும் என்பதற்காகத்தான் முழுமையாக இதை நாம் கொண்டு வந்திருக்கிறோம். வேல்முருகன் அவர்கள் சொன்னமாதிரி முறையான கட்டணம் சார்ந்து அதை நாம் தெளிவுபடுத்திட வேண்டும். மிரட்டுகிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள்.

சில நேரங்களில் பெற்றோரே சொல்வதும் கிடையாது. எப்படியோ என்னுடைய பிள்ளைகள் படித்தால் போதும். இப்போது நீங்கள் சொல்வதுபோன்று, தனியார் பள்ளிகளில் சேர்வதை நாங்கள் யாருமே எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பிள்ளைகள் படித்தால் போதும் என்று நினைக்கிற அரசாங்கம்தான் நம்முடைய அரசாங்கம். இன்றைக்கு நமது முதலமைச்சர் அவர்களின் நிர்வாகத் திறமையின்மூலமாக per capita income ஓராண்டுக்கு ரூபாய் மூன்று இலட்சத்து அறுபதாயிரமாக உயர்ந்துள்ளது. So, இன்றைக்கு இருக்கக் கூடிய காலச்சூழ்நிலையில் எங்கு வேண்டுமானாலும் பிள்ளைகளை சேர்க்கட்டும். இது ஜனநாயக நாடு. கையைப் பிடித்து இழுத்து வந்து நீ அரசுப் பள்ளியில்தான் சேரவேண்டும் என்று சொல்வதைக் காட்டிலும், நாங்கள் நிறைய திட்டங்களைக் கொண்டுவருகிறோம். தேவைப்படும் பட்சத்தில், எங்கள் அரசுப் பள்ளிகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் நாங்கள் தொடர்ந்து செய்தோம். Transparency இருக்க வேண்டும், பிள்ளைகள் படித்தால் போதுமென்ற எண்ணம்.

அதே நேரத்தில், CBSE Schools and IB, IGCSECambridge போன்று IBO சார்ந்து வரும்போது, அதனுடைய கட்டுப்பாடு என்பது Regional Officeக்கு சென்றுவிடுகிறது. Central Government கட்டுப்பாட்டிற்கு சென்றுவிடுகிறது. அதனால்தான் ஆதங்கத்தோடு வேல்முருகன் அவர்கள் சொல்லும்போது நம்முடைய Stateல் நடத்தும்போது, அதற்கான முழு அதிகாரம் நம்மிடம்தான் இருக்க வேண்டும் என்கின்ற கருத்தைச் சொன்னார்கள். But இருந்தாலும், அதுசார்ந்து எந்தக் கருத்துகள் வந்தாலும் immediate ஆக நாங்களும் R.O மூலமாக சொல்கிறோம், பிள்ளைகள் படிக்க வரும்போது கட்டணத்தை ஒரு காரணம் சொல்லி தயவுசெய்து அவர்களை வெளியில் நிற்க வைக்காதீர்கள் என்பதை நாங்களும் வலியுறுத்தி சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதேபோல, matriculation சார்ந்து, நம்முடைய கட்டமைப்பில் இருக்கக்கூடிய தனியார் பள்ளிகள் சார்ந்து வரும்போது, பல சட்டமன்ற உறுப்பினர்கள், இன்று நாங்களே சில நேரங்களில் அறக்கட்டளை மூலமாக பிள்ளைகளை படிக்கவைக்கிற காரியத்தை செய்து கொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், அந்த private schoolsஐ சார்ந்தவர்களிடமும் நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். நானும் தொடர்ந்து 4 வருடங்களாக press peopleஐ பார்க்கிறபோது சொல்கிறேன். யாராவது பெற்றோர்கள் எங்களிடம் வந்து ஒரு புகார் சொன்னார்கள் என்றால், அடுத்த நிமிடம் அந்தப் பள்ளிகள்மீது நாங்கள் நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறோம் என்பதை வலியுறுத்தி செய்து கொண்டிருக்கிறோம். எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நாங்கள் வெளியில் சொன்னால்தான் அது சரியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். சில நேரங்களில் பெற்றவர்களும் அதைச் சொல்வதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். இதைச் சொல்லி நாளைக்கு நமது பிள்ளைகளை ஏதாவது செய்துவிடுவார்கள் என்று தயக்கம் காட்டுகிறார்கள். அதுமாதிரி பயப்படத் தேவையில்லை.

ஒரு almighty என்பது அரசாங்கம்தான். நீங்கள் அரசாங்கத்திடம் சொன்னீர்களென்றால் மற்றவைகளை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் உங்களுடைய கருத்துகளை நாங்கள் உள்வாங்கிக் கொண்டு அதை ஒரு புதிதான விதிகள்மூலமாக உள்ளே அதை உட்படுத்தி, அதைச்சார்ந்தும் நல்ல ஒரு நடவடிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி நாங்கள் கண்டிப்பாக செய்வோம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் பதிலுரை வழங்கினார்.

---

**கழக வெளியீட்டுக் குழு செயலாளர்**

**திருச்சி செல்வேந்திரன் புதல்வி**

# எஸ்.ஜெயந்தி மறைவு!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!**

சென்னை, ஜன. 27 –

கழக வெளியீட்டுக் குழுச் செயலாளரும் கழக மூத்த முன்னோடியுமான திருச்சி செல்வேந்திரனின் புதல்வியும், செ. எழில்மாறன் செல்வேந்திரனின் சகோதரியுமான எஸ்.ஜெயந்தி அவர்கள் நேற்று முன்தினம் (25.1.2026 – ஞாயிற்றுக் கிழமை) அதிகாலை 2 மணியளவில் உறையூர் காமாட்சி யம்மன் கோவில் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்த கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை, புதல்வியை இழந்து வாடும் திருச்சி செல்வேந்திரன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### விருகம்பாக்கம் அரங்கநாதன்

### சனவரி 27 (1965)



**இந்தித் திணிப்பை தமிழகமே எதிர்த்து மாபெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த காலகட்டத்தில் விருகம்பாக்கம் கழகத் தோழர், 35 வயதே ஆன அரங்கநாதன் மத்திய அரசின் தொலைபேசித் துறையில் பணியாற்றியவர். விருகம்பாக்கம் இளைஞர்களுக்கு திராவிட இயக்க ஏடுகளை வரவழைத்து படிக்கச் செய்வதை தனது கடமையாகக் கொண்டிருந்தார்.**

**இந்தியை எதிர்க்க பெரும் தியாகம் செய்ய வேண்டுமென ஒருமாத காலமாக தனது சகோதரியிடம் கூறி வந்தவர். திடீரென 27.1.1965 அன்று அதிகாலை இரண்டு மணியளவில் ஓர் மாமரத்தின்கீழ் தன் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி, தீ வைத்துக் கொண்டு, "என் உடலையே தமிழுக்காகவும், இந்தியை எதிர்ப்பதற்காகவும் தியாகம் செய்கிறேன். வாழ்க தமிழ்! ஒழிக இந்தி!" என முழக்கமிட்டவாறே உயிர்த் துறந்த தியாகி.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

---

### சர்வதேச தரத்தில் தமிழ்நாட்டில் மக்கள் நலவாழ்வில் மகத்தான மூன்றாம் நிலை பராமரிப்பு

# மக்கள் நலவாழ்வின் புரட்சியாளர் நமது முதல்வர்!



தமிழகத்தில் மக்கள் நல சமூக குறியீடுகள் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக உள்ள காரணம் உலக வரை முறைகளைப் பின்பற்றி 35 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 37 மாவட்ட தலைமை, 197 தாலுகா மருத்துவமனைகள், 1832 கிராமப்புற 504 நகரப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் உட்கட்டமைப்பு ஏற்படுத்தி முதல்நிலை (Primary), இரண்டாம் நிலை (Secondary), மூன்றாம் நிலை (Tertiary), என மூன்று பிரிவு தரமான சிகிச்சை பராமரிப்பு, சராசரியாக 495 நபர்களுக்கு ஒரு மருத்துவர் என்ற விகிதாசாரத்தை ஏற்படுத்தியது நம் முதல்வரின் சீரிய நீர்வாகத்தினால்தான்.

ஒரு மருத்துவராக அரசியல் பணியில் இருப்பதால் அடிக்கடி தமிழகம் முழுவதும் கழகத்தோழர்கள், உற்றார் உறவினர்கள் தங்கள் உடல் சார்ந்த பிரச்சினைகளுக்கு அணுகுவதால் என்னால் இயன்ற உதவிகள், பரிந்துரைகளை மனநிறைவுடன் செய்து வருகின்றேன். இக்கட்டுரையை எழுத தூண்டுதலாக இருந்த காரணம் கடந்த 6 மாதங்களில் ஆலங்குளம் அருகில் உள்ள கிராமங்களைச் சார்ந்த மூன்று நபர்களுக்கு அரிய வகை சிக்கலான தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு, பின்னர் மூன்றாம் நிலை உலக தரம் (Tahasy Level) வாய்ந்த சிகிச்சை அரசு மருத்துவமனைகளில் பெற்ற விவரங்களை தனியார் மற்றும் மேலை நாட்டில் பணிபுரியும் என் சக மருத்துவர்களுக்கு பெருமிதத்தோடு விவரித்த போது வாயடைத்து வியந்து பாராட்டியதுதான் நிதர்சனமான உண்மை.

முதலாவது 3 வயது சிறுவனுக்கு மரபணு சார்ந்த அறிய வகை நோயினால் சிறுநீரகங்கள் பழுதடைந்துள்ளது என சிறப்பு பரிசோதனைகள் வாயிலாக கண்டறியப்பட்டது. பின்னர், அவர் தந்தைக்கு எவ்வாறு வீட்டிலேயே சிறுநீரக சுத்திகரிப்பு செய்திட வேண்டும் என்ற சிறப்பு பயிற்சியினை அளித்து "மாதந்தோறும் இல்லம் தேடி மருத்துவம்" வாயிலாக சுத்திகரிப்பு உபகரணங்கள் (CAPD bag) வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், தற்போது கல்லீரல் மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக அரசு உறுப்பு மாற்றம் காத்திருப்பு பட்டியலில் உள்ளான்.

இரண்டாவது 13 வயது 8ஆம் வகுப்பு மாணவனுக்கு திடீரென இரண்டு கால்களும் செயலிழந்து மூச்சு திணறல் ஏற்பட்டு திருநெல்வேலி அரசு கல்லூரி மருத்துவமனை அவசரசிகிச்சை அளித்து, மார்புக்கூட்டுக்கும் மேல் முதுகுதண்டுவடத்திற்கு இடையே பெரிய கட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, மேற்கொள் சிகிச்சைக்கு 108 நோயாளர் அவசர ஊர்தியில் சென்னை ஓமந்தூரார் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, இதயம், நுரையீரல், தண்டுவட அறுவை சிகிச்சை மருத்துவர்கள் ஒருங்கிணைந்து இரண்டு கட்டமாக பலமணி நேர அறுவைசிகிச்சைக்கு பிறகு கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக புற்று நோய் கட்டி என உறுதி செய்யப்பட்டவுடன், உடனடியாக புற்றுநோய்க்கான கதிர்வீச்சு மற்றும் மருத்துவ சிகிச்சையை திருநெல்வேலி அரசு பல்நோக்கு புற்று நோய் மையத்தில் பெற்று தற்போது நோயிலிருந்து நிவாரணமடைந்து மீண்டும் நடக்க ஆரம்பித்துள்ளான். வெளிப்புற நோயாளியாக மருத்துவர்களின் தொடர் கண்காணிப்பில் உள்ளான்.



டாக்டர். **பூங்கோதை ஆலடி அருணா**

*மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர், தி.மு.க.*

மூன்றாவது 21 வயது இளைஞனுக்கு பிறவியிலேயே சிக்கலான இதய குறைபாடு கண்டறியப்பட்டு, 2008-2009 ஆண்டு தொடங்கப்பட்ட கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் பயனாளியாக தனியார் மருத்துவமனையில் சிறப்பு இதய சிகிச்சை பெற்று பள்ளிப்படிப்பை முடித்து தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். 19 வருடங்கள் கழித்து இதய குறைபாட்டை முழுமையாக நீக்கிட அடுத்த கட்ட நவீன சிகிச்சைக்கு 35 லட்சம் தேவைபட்டபோது, தாயுள்ளத்தோடு நமது முதல்வர் காப்பீட்டு திட்டத்தின் உச்ச வரம்பை தளர்த்தி சிறப்பு அனுமதி வழங்கியதால் மீண்டும் அதே தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று முழுமையாக குணமடைந்துள்ளார்.

நவீன வாழ்வியல், சுற்றுச் சூழலியல் மாசு, அதிக இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் ஆகிய காரணிகளால் இதயம், நுரையீல், சிறுநீரகங்கள் பாதிப்பு, புற்று நோய் என தொற்றா நோய்கள் உலகமெங்கும் அதிகரித்து, முக்கியமாக இந்தியா போன்ற வளர்கின்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக உள்ளது என தரவுகள் கூறுகின்றன.

எனவேதான் நமது முதல்வர் நோய்த் தடுப்பு, ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து நோயின் வீரியத்தை கட்டுப்படுத்த போர்க்கால அடிப்படையில், **வரும் முன் காப்போம்**, **மக்களைத் தேடி மருத்துவம்**, **நலம் காக்கும் ஸ்டாலின்** போன்ற திட்டங்களை முதலாவது, இரண்டாவது நிலை மருத்துவ கட்டமைப்பு வாயிலாக தொடர்ச்சியாக தமிழகம் முழுவதும் நடைமுறைபடுத்தப்படுகிறது.

மூன்றாவது நிலை மருத்துவ சிகிச்சை கிடைத்திட மாரடைப்பு மற்றும் பிற இதயம் சார்ந்த நோய்களை கண்டறிந்து உரிய சிகிச்சை பெற்றிட 25 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் "இதயச்சிலாகை செலுத்தல் மையம் (Cardiac Cath Labs) அமைக்கப்பட்டுள்ளது

சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்கு தொடர்ச்சியாக சிறுநீரக சுத்திகரிப்பு தேவைப்படுவதால் 141 மாவட்ட தாலுகா மருத்துவமனைகளில் 1287 இரத்த சுத்திகரிப்பு கருவிகள் உள்ளதால் வருடந்தோறும் 8.4 லட்சம் நோயாளிகள் பயனடைந்து வருகின்றனர். ஆனால் 10 ஆண்டுகளாக மெத்தனமான அ.தி.மு.க. ஆட்சியில் 808 சுத்திகரிப்பு கருவிகள் பெறப்பட்டு 4.72 லட்சம் பயனாளிகளுக்கும் சரியான முறையில் சிகிச்சையும் வழங்கப்படவில்லை என்பதே உண்மை.

இவ்வாறே புற்றுநோயினர்க்கு சர்வதேச தரநிலைக்கு இணையாக, அறிவியல்பூர்வமான மருத்துவ ஆதாரங்களின் அடிப்படையில் சிகிச்சை கிடைத்திட 12 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பல்துறை மருத்துவர்கள் தலைமையில் சிறப்பு புற்றுநோய் மையங்கள் உருவாக்கப்பட்டு திறம்பட இயங்கிவருகின்றன. கூடுதலாக 28 மாவட்ட மருத்துவமனைகளில் கதிர்வீச்சு மற்றும் புற்றுநோய்க்கான மருந்துகள் செலுத்தும் மையங்கள் இந்தியாவில் நம் மாநிலத்தில் மட்டுமே, இத்தகைய கட்டமைப்புக்கு செயல்வடிவம் வழங்கிய பெருமைக்குரியவர் நம் முதல்வரே.

இந்தியா கடந்த 20 ஆண்டுகளாக "**கீழ் நடுத்தர வருவாய்**" நாடாக தேக்க நிலையில் உள்ள காரணம் ஒன்றிய அரசு மக்கள் நல வாழ்வுத் துறைக்கு மொத்த நிதி ஒதுக்கீட்டில் 2% மட்டுமே, ஆனால் தமிழகத்தின் ஒதுக்கீடு 8.4%மாகும். மேலும் இந்தியாவில் 47% மக்கள் தங்கள் கைக்காசையும் செலவழித்து, (Out of pocket Expenditure) கடனும் வாங்குவதால் வறுமை நிலைக்கு தள்ளப்படுவதால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைபடுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் "முதலமைச்சரின் காப்பீடு திட்டத்தினால் 15% -17% மக்கள் மட்டுமே தங்கள் கைக்காசை பயன்படுத்துவதால், தற்போது உயர் நடுத்தர வருவாய் மாநிலமாக உள்ளது.

எவ்வித சமரசமுமின்றி "**எல்லோருக்கும் எல்லாம்**" என்ற உயர்ந்த கோட்பாட்டின் அடிப்படையில் எவரும் பின்தங்கி விடக்கூடாது, என்பதால் அனைத்து துறைகளிலும் தொலை நோக்கு பார்வையோடு சிறப்பான நிர்வாகத்தை திட்டமிட்டு வகுத்துள்ளது 'திராவிட மாடல்' அரசு. கடந்த 41/2 ஆண்டுகளாக 11% பொருளாதார வளர்ச்சியை பெற்று டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை 2030ஆம் ஆண்டிற்குள் அடையும்போது தற்போது **உயர் நடுத்தர வருவாய்** நிலையில் உள்ள தமிழ்நாடு "**உயர் வருவாய் நிலையை பெறும் போது**" திராவிட மாடல் 2.0 அரசு மீண்டும் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உலக அரங்கில் தொடர்ந்து தமிழன் தலைநிமிர்ந்து இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக நிற்பது திண்ணம்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் அ.தி.மு.க, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாதேஸ்வரன் அக்கட்சியில் இருந்து விலகி கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். அப்போது மாவட்ட அவைத் தலைவர் முரா. கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் டாக்டர் வே.செழியன், இரா.வரதராஜன், நகரச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் பர்கத் அலி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சேகர், ராஜேந்திரன், ரஜினி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.